IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.

OS No. 39/2020

**12.10.2023 – வா.சா.1 திருமதி. ஐஸ்வர்யா** சத்திய வாக்குமூலத்தின் பேரில் 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

எனக்கு சொந்தமான சொத்தை எனக்கு தெரியாமல் விற்றுவிட்டதால் என்னுடைய பங்கை திரும்ப கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். முதல் அயிட்டமாக காட்டப்பட்டுள்ள எங்கு உள்ளது என்று எனக்கு தெரியும். அந்த சொத்தின் புல எண் , விஸ்தீரணம் குறித்து எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியவில்லை. அந்த முதல் அயிட்ட சொத்தானது எனது அப்பா எனது தாத்தா, எனது இரண்டு பெரியப்பாக்கள் ஆகியோர் சேர்ந்து செய்து கொண்ட பாகபிரிவினை படி எனது அப்பாவுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தாகும் . மேற்சொன்ன அயிட்ட 1 சொத்து விவரம் குறித்து எனது அம்மா மூலமாக தெரிந்து கொண்டேன். எனது பெற்றோர்கள் ஒன்றாக வசித்து வருகிறார்கள் என்று கேட்டால் கடந்த ஒரு ஆண்டாக பிரிந்து வாழ்கிறார்கள். வழக்கு 1வது அயிட்ட சொத்தை 2, 3 பிரதிவாதிகள் கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 கிரைய ஆவணத்தில் சொத்தானது குடும்ப மேம்பாட்டு செலவுக்காக, இளவர் பராமரிப்பு செலவிற்காக விற்கப்பட்டது என கண்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2–ஐ நான் பாத்துள்ளேன். வா.சா.ஆ.2–ஐ எனக்கு காப்பாளர் என்ற முறையில் எனது தந்தையும் , தாயாரும் சேர்ந்து எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கிரையத்தை பொருத்து எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் உள்ளது. எனது அப்பாவுக்கு என்ன தீயப்பயக்கம் உள்ளது என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 2, 3 பிரதிவாதிகள் வா.சா.ஆ.2 கிரையம் பெற்ற அதே தேதியில் எனது தாத்தா பொன்னுசாமியிடம் இருந்தும் ஒரு சொத்தை கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். என் தாத்தா எழுதி கொடுத்த கிரைய சொத்தில் எனது பெரியப்பா இருவரும் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2ம் எனது தாத்தா எழுதி கொடுத்த கிரைய

ஆவணமும் ஒரே சார் பதிவாளர் அலுவலகத்தில் ஒரே ஆவண எழுத்தாளரால் தான் எழுதப்பட்டு பதிவு செய்யப்பட்டது என்றால் அப்போது நான் இளவர் என்பதால் எனக்கு அது குறித்து சரியாக தெரியவில்லை. எனக்கு மேற்சொன்ன விவரம் தெரியும் என்றும் , தெரியும் என்று சொன்னால் என் வழக்கிற்கு பாதகமாகிவிடும் என கருதி தெரியாது என்று பொய் சொல்கின்றேன் என்றால் சரியல்ல. எனது அப்பாவிற்கு வா.சா.ஆ.2 எழுதி கொடுக்கும் போது தீயப்பயக்கம் இருந்திருக்கும் பட்சத்தில் என் குடும்ப நபர்கள் தடுத்திருப்பார்கள் என்றும் அவ்வாறு எந்த ஒரு தீயப்பயக்கமும் என் அப்பாவுக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாகபிரிவினை ஏற்பட்ட காலத்தில் நான் பிறக்கவில்லை. பாகபிரிவினை ஏற்பட்டவுடன் சொத்துக்கள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு அவர் அவர் தனி சுவாதீனத்தில் அனுபவிக்கப்பட்டு வந்தது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு முதலாவது அயிட்ட சொத்து பொது குடும்ப சொத்து என்பதை காட்ட ஆதாரம் உள்ளதா என்று கேட்டால் உள்ளது . நான் சொல்வது போல் பொது குடும்ப சொத்து என்று காட்ட எந்த ஆதாரத்தையும் நான் இதுநாள் வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல . வா.சா.ஆ.1 பாகபிரிவினை ஏற்பட்டவுடனே என் அப்பாவின் தனிப்பட்ட சொத்தாக ஆகிவிட்டது என்றும் என்னுடைய பராமரிப்பு மற்றும் குடும்ப மேம்பாட்டுக்காக எனது அப்பா 2, 3 பிரதிவாதிகளுக்கு மேற்படி சொத்தை உரிய தொகையை பெற்று கொண்டு எழுதி கொடுத்துவிட்டார் என்றும் ஆகவே அந்த சொத்து நான் எவ்வித உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 முறையாக பிரதிபலன் பெற்று கொண்டு பதிவு செய்யப்பட்டது என்றும் நான் சொல்வது போல் எனது அப்பாவின் தீயப்பயக்கத்தின் காரணமாக வா .சா.ஆ.2 எழுதப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு விவரங்களை எனது தகப்பனார் எனக்கு சொன்னார் என்றால் எனது அம்மா தான் சொன்னார் . கிரையம் பெற்ற தேதியில் இருந்து 2, 3 பிரதிவாதிகள் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் எனது அம்மா தான் 2, 3 பிரதிவாதிகள் அவ்வாறு சுவாதீனத்தில் இருப்பதாக சொன்னார். வா.சா.ஆ.2 சொத்து விற்ற பணத்தில் இருந்து எனது

மற்றும் எனது குடும்ப மேம்பாட்டு செலவிற்கு செலவழித்தது போக மீதி பணத்தில் எனது அப்பா 2வது அயிட்ட சொத்தை வாங்கினார் என்று சொன்னால் மேற்படி பணத்தில் 2வது அயிட்ட சொத்து வாங்கியது உண்மை தான். ஆனால் அந்த பணத்தில் எனக்கோ , குடும்ப மேம்பாட்டுக்கோ எனது அப்பா செலவு செய்யவில்லை . ஒரு சொத்தை விற்று பிரதிபலனை அனுபவித்த பிறகு அந்த சொத்தில் உரிமை கோருவது எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல . எனது தகப்பனார் கொடுத்த துர்போதனை காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல . கிரையம் பெற்ற தேதியில் இருந்து 2, 3 பிரதிவாதிகள் 1வது அயிட்ட சொத்தை எந்த தடையும் இன்றி அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் சரிதான் . அவ்வாறு தான் எனது அம்மா சொன்னார்.

/ உண்மை நகல் /

ஒம்/– P. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.